**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO.312/ 2023**

Deposition of PW - 2 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 26.02.2025 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜா | Age | : | |
| Father's Name | : | | Village | : | |
| Calling | : | | Taluk | : | |

**முதல் விசாரணை**

நான் ஸ்டார் ஹெல்த் நிறுவனத்தின் திருச்சி கிளையில் பணிபுரிகின்றேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எங்கள் நிறுவனத்தில் சீனிவாசன் என்பவர் மருத்துவ காப்பீடு செய்திருந்தார். அவர் 12.12.2022-ம் தேதி விபத்தில் காயம் அடைந்ததாக சொல்லி மருத்துவ செலவிற்கு காப்பீட்டுத் தொகை கோரியிருந்தார். அவர் எடுத்த காப்பீடானது 28.01.2022 முதல் 27.01.2023 வரை நிலுவையில் இருந்தது. விபத்து நடந்த தேதியானது காப்பீடு நிலுவையில் இருந்த தேதியில் ஏற்பட்டதால் அவருக்கு காப்பீட்டு தொகை வழங்குவதற்கு தகுதி இருந்தது. அதன் அடிப்படையில் ரூ.42,431/- தொகை கேட்டிருந்தார். எங்கள் நிறுவனம் சார்பாக ரூ.30,899/- வழங்கினோம். முழுத் தொகைக்கான மருத்துவ பில்களையும் சீனிவாசன் ஒப்படைத்திருந்தார். சீனிவாசன் என்பவருக்கு **மருத்துவ காப்பீட்டுத் தொகை வழங்கிய ஆவணங்கள் ம.சா.ஆ.5** ஆகும்.

**குறுக்கு விசாரணை** - இல்லை.

சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.